**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.77/2018

Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ஆறுமுகம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of October 2023.

05.10.2023

**குறிப்பு:** எதிரி முனியசாமிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பிடியாணை நிலுவையில் உள்ளது. சாட்சி குவிமுச பிரிவு 299 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 32(1)ன் கீழ் விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரி முனியசாமியை தெரியும். அவர் எனது மச்சான் மகன் ஆவார். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் எனது வீட்டில் இருந்தபோது எனது அக்கா மகன் முருகேசனும், எதிரி முனியசாமியும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் உடனே ஏன் இந்த மாதிரி சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரி முனியசாமி நான் சொல்ல முடியாத வார்த்தையால் பேசி அவரது கைலியை தூக்கிக்காட்டி என்னை கடி என்னை கடி என்று கூறினார்.

2) இதுகுறித்து நான் தேரிருவேலி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள். எனக்கு கையொப்பம் செய்யத்தெரியாததால் கைரேகை வைத்தேன். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.77/2018
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of October 2023.

05.10.2023

**குறிப்பு:** எதிரி முனியசாமிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பிடியாணை நிலுவையில் உள்ளது. சாட்சி குவிமுச பிரிவு 299 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 32(1)ன் கீழ் விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரி முனியசாமியை தெரியும். அவர் எனது உறவினர். அசா.1 எனது சின்னம்மா ஆவார். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை, காலை 08.00 மணியளவில் எனக்கும், எதிரி முனியசாமிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அப்போது அசா.1 எனது சின்னம்மா ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எனது சின்னம்மா அசா.1யை எதிரி அசிங்க அசிங்கமாக பேசினார். வேறுஒன்றும் இல்லை. இதுகுறித்து அசா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். நான் அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அசா.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.